35—

சாலை வசதி

*120139—**திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கூடமலையிலிருந்து நினங்கரை வழியாக பச்சமலை மற்றும் மாயம்பாடிக்கு வனத் துறைமூலமாக புதிய சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, கூடமலையிலிருந்து நினங்கரை வழியாக பச்சமலை, மாயம்பாடிக்கு வனத் துறை சார்பாக சாலைகள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.*

முற்பகல் 10–00

திரு. கு. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதிக்கு 270 கோடி ரூபாய் அளவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கியதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சென்ற வாரம், 1 ஆம் தேதி இந்தத் திட்டத்தை ஆத்தூரில் துவக்கி வைக்க வருகை தந்த தமிழகத்தின் மாண்புமிகு துணை முதல்வர் எங்கள் தளபதியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதைப் பெற்றுத் தந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பச்சைமலைப் பகுதிக்கு நினங்கரை வழியாக மாயம்பாடிக்கு புதிய சாலைகள் அமைக்க வேண்டும் என்று தொடர்ந்து நான்

2011 பிப்ரவரி 9]

சட்டமன்றத்தில் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம், சோபனாபுரம், தார்ச்செங்காட்டிப்பட்டி வழியாக சுமார் 70 கிலோ மீட்டர் தூரம் சுற்றி திருச்சி மாவட்டத்திற்குச் சென்றுதான், செல்ல வேண்டும். சேலம் மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலகம் இருக்கிறது, கெங்கவல்லியில் வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. பள்ளி, கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் வந்து செல்வதற்கும், பொதுமக்கள் திருச்சி மாவட்டம் சென்று வராமல், சேலம் மாவட்டத்திலிருந்து நேரடியாக வருகை தருவதற்கு, கூடமலை, நரிப்பாடி, நினங்கரையிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரமுள்ள மாயம்பாடிக்குப் புதிய வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், அந்த மக்கள் நேரடியாக சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் தொடர்புகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை நரிப்பாடியிலிருந்து நினங்கரை வரை மண் சாலையாக உள்ளது. இச்சாலை நினங்கரையிலிருந்து மாயம்பாடி வரை வேலூர் தெற்கு காப்புக்காட்டினுடைய 4 கிலோ மீட்டர் தூரம் வரை செல்கிறது. அதிலே 2.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் இருக்கிறது. அந்தச் சாலை மேம்படுத்தப்படுமேயானால் மாயம்பாடி, நல்லமாத்தி, பெரியபத்தணம், சிறியபத்தணம், பெரியமங்கலம், சின்னமங்கலம், ஓடைக்காட்டுப்புதூர், கொடுங்கன், நடூர் ஆகிய ஒன்பது கிராமங்களில் இருக்கின்ற 2,000 மக்கள் பயன்பெறுவார்கள் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. இந்தத் துறையின் சார்பாக சாலை அமைக்கின்ற வாய்ப்பு இல்லை. ஊரக வளர்ச்சித் துறையோ அல்லது சாலைகள் அமைத்துக்கொண்டிருக்கின்ற நெடுஞ்சாலைத் துறையோ முன்வருமேயானால் அந்த 2.7 கிலோ மீட்டர் தூரத்தை மேம்படுத்துவதற்கு வனத் துறையின் சார்பாக அனுமதி அளிக்கப்படும். மேலும், நிலம் தேவைப்படுமென்றால், 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டப்படி, எவ்வளவு நிலம் தேவைப்படுகிறதோ அந்த நிலத்திற்கு ஈடாக இரண்டு மடங்கு*

நிலமும், அந்த நிலத்திலே மரங்கள் வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், மூன்று ஆண்டுகளுக்கான செலவையும், அந்த நிலத்தினுடைய தொகையையும் கொடுப்பதற்கு அரசு முன்வந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த இடம்தான் தேவை என்றும், இதற்கு மாற்று இடம் இல்லை என்ற சான்றிதழோடு அதற்கான கருத்துருவை அனுப்பி வைத்தால், கோப்பினை மத்திய அரசுக்கு அனுப்பி, அனுமதி பெற்றுத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.*

திரு. கு. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.*

திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரான ஆண்டாம் 1967–ல் தொடங்கப்பட்ட எனது சட்டமன்றத் தொகுதி, 2011–ல் தொகுதி மறு சீரமைப்பின் காரணமாக நீக்கப்பட்டுள்ளது. இந்த 44 ஆண்டுகால வரலாற்றில், எனது தொகுதிக்குட்பட்ட மேல்நந்தியம்பாடி கிராமத்தின் 40 ஆண்டுகாலக் கோரிக்கையான, மிகவும் அத்தியாவசியமான கோரிக்கையான மேல்நந்தியம்பாடி, அரசம்பட்டு கிராமங்களுக்கிடையே உள்ள வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் சாலை அமைப்பதாகும். அதிகபட்சமாக ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரமே வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதற்காக நானே நேரில் சென்று அதிகாரிகளை எல்லாம் சந்தித்து மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, தற்போது வனத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள்மூலமாக அந்தக் கோப்பு பெங்களூருவில் உள்ள வனத் துறையின் தென் மண்டல அலுவலகத்திற்குச் சென்றுள்ளது. அப்படிப்பட்ட அத்தியாவசியமான சாலையை அமைப்பதற்கான உரிய ஆணையைப் பெற்றுத் தரவும், சாலை அமைக்கவும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலைக்கு அனுமதி கோரி பெங்களூருவில் உள்ள மத்திய அரசினுடைய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அனுமதி கிடைக்கும். அனுமதி கிடைத்தவுடன் அந்தச் சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும். இதுபோன்ற சாலைகள் அமைப்பதற்கும், வனப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கும், சம நிலையில் அதைப் பராமரிப்பதற்கும், இதுவரை 16 நிகழ்வுகளிலே தலைவர் கலைஞர் அவர்களின் அரசு முயற்சி எடுத்து அனுமதி பெற்றுத் தந்திருக்கிறது. நான் ஒப்பீட்டிற்காகக் குறிப்பிடவேண்டுமேயானால் கடந்த அரசிலே 6 நிகழ்வுகளுக்குத்தான் அவர்கள் 14.29 ஹெக்டேர் நிலத்தையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே 16 நிகழ்வுகளுக்கு 28.598 ஹெக்டேர் நிலம் பெற்றுத் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.*

திரு. பா. வேல்துரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட புலவன் குடியிருப்பு, பூதத்தான் குடியிருப்பு, பட்டங்காடு, பொட்டல் மற்றும் நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட பழவக்கல் இசக்கியம்மன் கோயில், தானியோடை போன்ற பகுதிகளை 4 மாதங்களாகத் தொடர்ந்து யானைகள் பயங்கரமாகச் சேதப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தினந்தோறும் பேப்பரில்கூட வருவதைப் பாத்திருப்பார்கள். நானும் இதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். நான் அங்கு போய்ப் பார்த்தேன். கடந்த 27 ஆம் தேதி அங்கே நேரடியாகச் சென்று பார்த்தபோது, அந்த ஊர் மக்கள் போராட்டம் பண்ணுவதற்கும், சாலை மறியல் பண்ணுவதற்கும் அங்கே கூடி திரண்டு நின்றார்கள். நான் அவர்களிடம் சென்று, ஒன்றும் பிரச்சினை*

இல்லை; இந்த அரசாங்கம் நாம் கேட்பதையெல்லாம் செய்து தரும்; எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. போராட்டம் செய்ய வேண்டாம் என்று அந்த ஊர் மக்களைக் கலைந்து போகும்படிச் சொல்லிவிட்டு வந்தேன்.

நஷ்ட ஈடு என்று சொன்னால், பயிர்ச் சேதத்திற்கு maximum 15,000 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த 27 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு யானைகள் 2 மோட்டார் சைக்கிள்களை தூக்கித் தூக்கிப் போட்டு விளையாடியிருக்கின்றன. அதற்கு நஷ்ட ஈடு எவ்வளவு என்று கேட்டால் 2,000 ரூபாய். ஒரு மோட்டார் சைக்கிளே முழுமையாகச் சேதப்பட்ட பிறகு 2,000/– ரூபாய் கொடுத்தால் எப்படி? இன்றைக்கு விலைவாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறியிருக்கிற நேரத்திலே (குறுக்கீடுகள்) வழங்கப்படுகிற அந்த நஷ்டயீட்டுத் தொகையையெல்லாம் நீங்கள் மாற்றி அமைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் ஒன்றும் பெருமைப்பட . . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை ஒரு நிமிடம். நீங்கள் கைத்தட்டி சந்தோஷப்பட வேண்டியதில்லை. விலைவாசி normal ஆக ஏறுவதுதான். அதாவது வாங்கும் திறன் கூடியிருக்கிறது. விலைவாசி கூடியிருக்கிறது. அதனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்துரை, யானை வருவதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு ஏதேதோ சொல்கிறீர்கள்.

திரு. பா. வேல்துரை: ஒரு நிமிடம், நான் சொல்கிறேன். இந்த வருஷமே 10 கி.மீ. தூரத்திற்கு மின் வேலி அமைத்துக் கொடுக்கவில்லையென்று சொன்னால், வேறு வழியே கிடையாது. அந்த ஊர் மக்கள் ஊரைக் காலி பண்ணிக்கொண்டு போக வேண்டியதுதான். அதனால், தயவுகூர்ந்து, உடனடியாக மின் வேலி அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யானையை மேய்ப்பதற்கு ஆள் போடச் சொல்கிறீர்களா? (சிரிப்பு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யானைகளுடைய நடமாட்டம் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வனத் துறை அதிகாரிகள் எடுத்துக்கொண்ட

2011 பிப்ரவரி 9]

தீவிர கண்காணிப்பின் காரணமாக, தமிழ்நாட்டிலே வன விலங்குகளினுடைய எண்ணிக்கையும் அதிகமாகியிருக்கிறது. அதன் காரணமாக சில இடங்களிலே யானைகளினுடைய எண்ணிக்கையும் அதிகமாகி, காட்டிலிருந்து அவை வெளியே வருகின்ற நிலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வன விலங்குகள் ஊருக்குள் வருவதைத் தடுப்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசிலே, சென்ற ஆண்டுவரை 1,267 கிலோ மீட்டருக்கு நாங்கள் மின் வேலி அமைத்திருக்கிறோம். அதிலே உங்கள் திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தளவில் பல இடங்களில், 114 கிலோ மீட்டருக்கு மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியிலுள்ள களக்காடு, முண்டந்துறை பகுதிகளிலே அதிக வன விலங்குகள் இருக்கின்ற காரணத்தால், அவை வெளியே வராமல் இருப்பதற்கு 46.63 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. மின் வேலி அமைத்தும் வெளியே வருகின்ற சில vulnerable point—களில் அவசரம் கருதி இப்பொழுது கோயம்புத்தூர், திருநெல்வேலி, திண்டுக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 80 கிலோ மீட்டர் தூரத்திற்கு அகழிகளை வெட்டுவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதைப்போன்ற பகுதிகளில் எங்களுடைய அதிகாரிகளை அனுப்பி, அதை ஆய்வு செய்து அது வழங்கப்படும்.

ஈட்டுத் தொகை வழங்குவதைப் பொறுத்த அளவில், இதுவரை, இந்தியாவின் மற்ற மாநிலங்களிலே என்ன இழப்பீட்டுத் தொகை கொடுக்கிறார்களோ, அதைத்தான் தந்துகொண்டிருந்தோம். ஆனால், சென்ற ஆண்டு, மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள்தான், மனித உயிரிழப்புக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்பதை 1½ இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். சிறிய காயங்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போல, சிறிய வீடுகளுக்கோ அல்லது பொருள்களுக்கோ இழப்பீடு ஏற்பட்டால், 5 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஆக, அந்தக் குழுவிலே உள்ள எங்கள் அதிகாரிகள் உரிய அளவிலே இழப்பீட்டை மதிப்பீடு செய்து, தருகிறார்கள். எங்கள் துறை அதிகாரிகள் மட்டுமல்ல, வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அதைப்போல வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். அவர்கள் மதிப்பீடு

செய்து தருகின்ற அந்தத் தொகையை நாங்கள் கடந்த 4 ஆண்டுக் காலத்தில் மட்டும் 7,463 நிகழ்வுகளுக்கு கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

வட்டச் சாலை

***114313—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரம் மற்றும் புற நகரம் ஆகியவற்றை இணைக்கும் வட்டச் சாலைத் திட்டத்தைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்புத்தூர் மாநகரில் 26 கிலோ மீட்டர் நீளமுள்ள மேற்கு வெளிவட்டச் சாலை, ரூ.284 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக அமைக்கப்படும் என்று 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணி முடிவுற்றவுடன் சாலை அமைப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.*

திரு. எம்.என். கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், மாநில அரசும் எடுத்த*